## வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

# சிறந்த விவசாயிகளுக்கு பரிசுகள்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்!

சென்னை, மே 14-

முதலமைச்சர் அவர்கள் உழவர் நலன் காத்திட வேளாண்மைத் துறையினை வேளாண்மை - உழவர் நலத்துறை என பெயர் மாற்றம் செய்து, வேளாண்மைக்கென மூன்று தனி நிதிநிலை அறிக்கைகளை சட்டமன்றத்தில் தாக்கல் செய்திட அனுமதியும் அளித்ததன் பலனாக பல உழவர் நலன் சார்ந்த திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டதால் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி கடந்த 2021-22 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளில் முறையே 119.97 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் 120.62 இலட்சம் மெட்ரிக் டன் என்ற சாதனை அடையப்பட்டுள்ளது.

இது கடந்த 2014-15-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடையப்பட்டுள்ள சாதனை ஆகும். டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக மே 24, 2022 அன்று 19 நாட்களுக்கு முன்னரே மேட்டூர் அணை திறக்கப்பட்டதாலும் ஆறு, கால்வாய்கள் முன்கூட்டியே தூர் வாரி தயார் நிலையில் வைத்திருந்தாலும் குறுவை தொகுப்பு திட்ட ரூ.61 கோடிக்கு செயல்படுத்தப்பட்டதாலும் கடந்த 47 ஆண்டுகளில் இல்லாத வரலாற்று சாதனையாக 5.36 இலட்சம் ஏக்கர் குறுவை நெல் சாகுபடி அடையப்பட்டது. பாசன விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக ஒன்றரை இலட்சம் இலவச மின் இணைப்புகள் விவசாயத்திற்காக வழங்கப்பட்டது.

ஒட்டுமொத்த கிராம ஊராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித்திட்டம், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம், உயர் விளைச்சல் தரும் ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களின் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கியது, தார்பாலின், ஜிங்க் சல்பேட், ஜிப்சம், உயிர் உரங்கள் மற்றும் வேளாண் உபகரணங்கள் ஆகிய அத்தியாவசிய பொருட்களை மானிய விலையில் வழங்கியது, நெல் தரிசில் பயறு வகை சாகுபடி மற்றும் மாற்றுப் பயிர்களான சிறுதானியங்கள், பயறுவகைகளை ஊக்குவித்தது, ரூ.7858 கோடியில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது போன்ற திட்டங்கள் உழவர்களின் வாழ்வில் ஒளியேற்றிவரும் திட்டங்களாகும். கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு கரும்பு சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.331.81 கோடி விவசாயிகள் வங்கி கணக்கில் நேரடியாக வழங்கப்பட்டது.

நடைமுறையில் உள்ள பயிர் காப்பீட்டுத்திட்டத்தில் ஒன்றிய அரசால் புகுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களால், இத்திட்டம் தொடங்கப்பட்ட 2016-2017 ஆம் ஆண்டை விட 2021-22-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் காப்பீட்டு மானியம் 240 சதவீதம் உயர்ந்தபோதும், விவசாயிகளின் நலனில் அதீத அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை 2023-2024 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட காப்பீட்டு மானியமாக ரூ.2,337 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு அரசின் பெரும் முயற்சியால், 2020-2021-ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,572 கோடி 12.79 இலட்சம் விவசாயிகளுக்கும், 2021-2022 ஆம் ஆண்டிற்கு 6.70 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.783 கோடியும் வழங்கியுள்ளது. மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருமழையால் பாதிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 29,797 சம்பா நெல் விவசாயிகளுக்கு விதைப்பு பொய்த்தல் இனத்தின் கீழ் ரூ.49.66 கோடியும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனதிட்டத்தின் கீழ் 1,61,149 எக்டர் பரப்பில் ரூ.1,138.10 கோடி நிதியில் நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறு வப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்க 1404 எக்டர் பரப்பளவில் பசுமைக் குடில், நிழல் வலை குடில், நிலப் போர்வை ரூ.18.92 கோடி நிதியில் அமைக்கப்பட்டுள்ளது. அறுவடைக்குபின் செய்இழப்புகளை குறைக்க 870 சிப்பம் கட்டும் அறைகள், 2915 குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள் ரூ.38.75 கோடி நிதியில் அமைக்கப்பட்டுள்ளது. 2693 நடமாடும் விற்பனை வண்டிகள் ரூ.328.35 இலட்சம் நிதியில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தரமான பந்தல் வகை காய்கறிகள் உற்பத்தி செய்வதற்கு 837.5 எக்டர் பரப்பில் ரூ.14.19 கோடி நிதியில் நிரந்தர பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மாநில மரமான பனைமர சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, 2022-23ம் ஆண்டில் பனை மேம்பாட்டு இயக்கம் ரூ.2.02 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது.

#### பண்ணை அளவிலான வர்த்தகம்!

2022-2023-ஆம் ஆண்டில் தேசிய வேளாண் சந்தைகளில் ரூ.1112.83 கோடி மதிப்பிலான 26.57 இலட்சம் எண்கள் தேங்காய் மற்றும் 45.47 இலட்சம் குவிண்டால் இதர விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 3.23 இலட்சம் விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வழியாக ரூ.999.07 கோடி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின்னணு தேசிய வேளாண் சந்தைகளில் 2022-2023ஆம் ஆண்டில், ரூ 646.04 இலட்சம் மதிப்பிலான 5.37 இலட்சம் எண்கள் தேங்காய் மற்றும் 24250 குவிண்டால் இதர விளைபொருட்கள பண்ணை அளவிலான வர்த்தகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இத்தகைய சாதனைகள் அடைவதற்கும் அரசின் திட்டங்களை சிறப்பான முறையில் வேளாண் பெருமக்களுக்கு எடுத்துச் செல்லும் வேளாண்மை - உழவர் நலத்துறையின் பணியாளர்களின் நலன்கருதி, வேளாண்மைஉழவர் நலத்துறையில் பணிபுரிந்து 2019ஆம் ஆண்டு வரை பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் குடும்ப வறுமை நிலையினை போக்கிட 116 பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது. மேலும், தகுதிவாய்ந்த 32 வாரிசுகளுக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 08.11.2022 அன்று கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

மேலும், வேளாண் தொழில்நுட்ப பணிகளை மேற்கொள்ளவும், விவசாயிகளிடம் அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்கவும், 2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக 162 உதவி வேளாண்மை அலுவலர்களும், 362 வேளாண்மை அலுவலர்களும், 27 உதவி தோட்டக்கலை இயக்குநர்களும், 169 தோட்டக்கலை அலுவலர்களும், 274 உதவி தோட்டக்கலை அலுவலர்களும் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் 2021 வரை இயற்கையெய்திய பணியாளர்களின் 19 வாரிசுகளுக்கு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் இன்று கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 167 இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு பணி நியமன ஆணை வழங்கியதன் காரணமாக, இறந்த பணியாளர் குடும்பத்தின் வறிய நிலையை போக்கி வாழ்வாதாரம் கிடைப்பதோடு, வேளாண்மைத்துறை பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நிகழ்வின் போது புதிய உள்ளூர் வேளாண் தொழில்நுட்பம் மற்றும் புதிய இயந்திரம் வடிவமைத்து பயன்படுத்தி வரும் இரண்டு விவசாயிகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்ச ரூபாயும் இயற்கை முறையில் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்து வரும் மூன்று விவசாயிகளுக்கு மொத்தமாக ரூபாய் இரண்டு இலட்சமும் வேளாண் பொருட்களை சாகுபடி செய்து ஏற்றுமதி செய்து வரும் விவசாயிக்கு ரூபாய் இரண்டு இலட்சமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை இயக்குநர், ஆ.அண்ணாதுரை, வேளாண் விற்பனை வேளாண் வணிக துறை இயக்குநர் எஸ்.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர். இரா. பிருந்தாதேவி மற்றும் அரசு உயர் அலு வலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைக்கான ”விரைவு துலங்கல் குறியீடு – QR Code மென்பொருள் செயலியை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை எழிலகத்தில், நேற்று முன்தினம் (12.05.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேளாண்மைத் துறையில் பணிகாலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் அ.அண்ணாதுரை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் எஸ். நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தாதேவி, ஆகியோர் உடனிருந்தனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - இன்று

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் - தொகுதி பார்வையாளர்கள் காணொலி காட்சி வாயிலாக கலந்தாலோசனைக் கூட்டம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

**கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், “மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்” இன்று (14.05.2023 – ஞாயிற்றுக்கிழமை), காலை 11.00 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.**

**இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை18.
நாள்: 12.05.2023

**தலைமைக் கழகம்,**
தி.மு.க

## திருப்பூர் மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில்

# கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சு போட்டி!

### பரிசு - பாராட்டுச்சான்றிதழ் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

திருப்பூர், மே 14-

திருப்பூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 2022-23 ஆம் நிதியாண்டிற்கு கல்லூரி மாணவர்களிடையே பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் 27.03.2023 திங்கட்கிழமை அன்று திருப்பூர் பல்லடம் சாலையில் அமைந்துள்ள எல்.ஆர்.ஜி மகளிர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு 05.05.2023 வெள்ளிக்கிழமை அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். எஸ்.வினித் தலைமையில் முதல் பரிசாக ரூ.10,000 இரண்டாம் பரிசாக ரூ.7,000 மூன்றாம் பரிசாக ரூ.5,000 என்ற வகையில் மொத்தம் ரூ.66,000 மதிப்புள்ள காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் கவிதை போட்டியில் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் இளங்கலை கணினி அறிவியல் இரண்டாமாண்டு பயிலும் மாணவி செ.சத்தியபிரியா முதல் பரிசும், அவிநாசி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளங்கலை வணிக நிர்வாகவியல் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி ம.அபாரணி இரண்டாம் பரிசும், முத்தூர் கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரியில் இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு பயிலும் மாணவி ச.சிவாத்தாள் மூன்றாம் பரிசும் பெற்றனர். கட்டுரைப் போட்டியில் திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியில் இளங்கலை ஆங்கிலம் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி ஈ.கீதாஸ்ரீ முதல் பரிசும், திருமுருகன்பூண்டி ஏ.வி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு பயிலும் மாணவி ரா.முத்துலட்சுமி இரண்டாம் பரிசும், திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் முதுகலை ஆங்கில இலக்கியம் முதலாமாண்டு பயிலும் மாணவி பெ. ஜெனிபர் ஜாஸ்மின் மூன்றாம் பரிசும் பெற்றனர். பேச்சுப் போட்டியில் உடுமலைப்பேட்டை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் முதுகலை வரலாறு முதலாமாண்டு பயிலும் மாணவி மு.விஷ்ணுப்பிரியா முதல் பரிசும், திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் கூட்டுறவு இரண்டாமாண்டு பயிலும் மாணவி சி.வி.ஜி, இரண்டாம் பரிசும், திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் இளம் அறிவியல் வேதியியல் மூன்றாமாண்டு பயிலும் மாணவி சா.பிருந்தா மூன்றாம் பரிசும் பெற்றனர்.

## பல்லடம் ஒன்றியத்தில் - அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த

# 300க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

### க.செல்வராஜ் எம்.எல்.ஏ., முன்னிலையில்

திருப்பூர், மே 14-

திருப்பூர் வடக்கு மாவட்டம், பல்லடம் மேற்கு ஒன்றியம், பூமலூர் ஊராட்சிக்குட்பட்ட கிடாத்துறைபுதூரில் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான க. செல்வராஜ் எம்.எல்.ஏ., முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்

திருப்பூர் வடக்கு மாவட்டம், பல்லடம் மேற்கு ஒன்றியம், சுக்கம்பாளையம் ஊராட்சி, பூமலூர் ஊராட்சிக்குட்பட்ட கிடாத்துறை புதூரில் அ.தி.மு.க.வை சேர்ந்த பல்லடம் அக்ரோ கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் சீனிவாசன் தலைமையில் பூமலூர் ஊராட்சி மன்ற துணை தலைவர் எ. நடராஜன், வார்டு உறுப்பினர் தங்கராஜ், சத்தியா, சுக்கம்பாளையம் ஊராட்சி துணைத் தலைவர் மருதாசலமூர்த்தி, கோடாங்கிபாளையம் ராசு, இச்சிப்பட்டி பார்த்திபன் உள்ளிட்ட பல்வேறு மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான க. செல்வராஜ் எம்.எல்.ஏ., முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைத்த அனைவருக்கும் கழகத் துண்டு அணிவித்து தலைமை கழகத்தின் சார்பிலும், மாவட்டக் கழகத்தின் சார்பிலும், ஒன்றிய கழகத்தின் சார்பிலும், ஊராட்சி கழகத்தின் சார்பிலும், கிளை கழகத்தின் சார்பிலும் வாழ்த்தி வரவேற்றார்.

க.செல்வராஜ் எம்.எல்.ஏ., பேசியதாவது ; பல்லடம் சட்டமன்ற தொகுதி, பூமலூர் ஊராட்சிக்குட்பட்ட கிடாத்துறை புதூர் கிராமம் தான் எனது தந்தையை பெற்ற தாயார் ஊர் ஆகும். இந்த மண்ணில் தான் எனது சொந்த பந்தங்களும் ஏராளமானவர்கள் உள்ளனர். இந்த பகுதியில் தி.மு.கவிற்கு அதிக வாக்கு கிடைக்காமல் இருந்து வந்தது எனக்கு நீண்ட நாளாக மிகுந்த வருந்தமாக இருந்து வந்தது. நான் எனது தாய் பிறந்த மண்ணுக்கு சென்று திருப்பூரில் பல்வேறு பொறுப்புகளுக்கு வந்து தி.மு.கவால் வளர்ச்சி அடைந்துள்ளேன். மக்களுக்கு என்னால் முடிந்த அளவு உதவிகளை இன்றளவும் செய்து வருகிறேன். இன்றைய தினம் மே 7ம் தேதி திராவிட ஆட்சி மாடல் நாயகர், நமது நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமயிலான கழக அரசு பதவியேற்று இரண்டாண்டு நிறைவடைந்து மூன்றாம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ள இந்த வேளையில் இப்பகுதியில் தி.மு.க. மேலும் வலிமை பெறும் வகையில் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து 300க்கும் மேற்பட்டோர் தி.மு.கவில் இணைந்து இருப்பது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சிக்கு எடுத்து காட்டு ஆக அமைந்துள்ளது. தி.மு.கவிற்கு புதிய உறுப்பினர் சேர்க்கைக்கு செல்லும் போது மகளிர் ஆர்வத்துடன் வந்து தங்களை தி.மு.கவில் இணைத்துக்கொள்கின்றனர். பட்டி தொட்டி எங்கும் தி.மு.க அசுர வளர்ச்சி அடைந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியின் பல்வேறு திட்டங்களே வரும் பாராளுமன்ற தேர்தலின் கதாநாயகனாக திகழும், வாக்கு திரட்டும் சக்தியாக அமையும் என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் எஸ்.கார்த்தி, வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ். குமார், வழக்கறிஞர் சி. கே.நந்தினி, பல்லடம் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.கிருஷ்ணமூர்த்தி (மேற்கு), நா.சோமசுந்தரன் (கிழக்கு), பொ.அசோகன் (பொங்கலூர் மேற்கு), பல்லடம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் தேன்மொழி, ஒன்றிய குழு துணைத்தலைவர் ஈ.பாலசுப்பிரமணியம், பூமலூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செந்தில் என்கிற தியாகராஜ், பூமலூர் ஊராட்சி மன்ற தலைவர் பிரியங்கா, பல்லடம் கிழக்கு ஒன்றிய அவைத்தலைவர் பரமசிவம், நெசவாளர் அணி அமைப்பாளர் பி.சி.கோபால், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.தங்கவேல், கிழக்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர் இச்சிப்பட்டி சிவக்குமார், பல்லடம் மேற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர்கள் ஆட்டோ குமார், ஒன்றிய பொருளாளர் அம்மாபாளையம் குமார், மாவட்ட பிரதிநிதிகள் துரைமுருகன், அன்பரசன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பாலகுமார், ஒன்றிய மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பானுமதி, விவசாய அணி துணை அமைப்பாளர் சுரேஷ் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்ட புதிய கட்சி அலுவலகம் வாழப்பாடியில் கட்டப்பட்டு வருகிறது அதற்கு கட்டிட நிதியாக ரூபாய் 5 லட்சத்தை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில், சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கத்திடம் மாநில பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிவராமன், மதுசூதனன் ஆகியோர் வழங்கினர். அப்போது மத்திய மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.ராஜேந்திரன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். பொன்.கௌதம சிகாமணி , ஏ.ஏ.ஆறுமுகம் ஆகியோர் உடன் இருந்தனர்.